Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)



# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

2024 ஜூன் மாத ரெனிவல் முடியும் சங்க உறுப்பினர்கள் மட்டும் தங்கள் அடையாள அட்டையை சங்க அலுவலகத்தில் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- CVPA

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 19 MAY 2024 Click - 02 Re. 1

## 35/2024 எனும் பதிவு எண்ணின் கீழ் Chennai Video & Photographers and Allied Traders Public Charitable Trust பதிவு செய்யப்பட்டது.!

## கட்டணம் ஏதுமின்றி உயர்கல்வி பயில கல்லூரிக்கு செல்லும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு வாழ்த்துக்கள்!

## நமது சங்க உறுப்பினர்களுக்காக ஒர்க் ஷாப் நடத்தி கொடுத்த கேனான் நிறுவனத்திற்கு நன்றி!

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம் !

நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்ற அனைவருக்கும் நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். நல்ல மதிப்பெண் பெற்ற அனைவரும் நமது குடும்ப விழாவில் கௌரவிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த ஆண்டு பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்ற நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் உயர்கல்வி படிக்க விரும்பி நமது சங்கத்தை நாடினார்கள். அவர்கள் விரும்பிய பாடப்பிரிவில் கட்டணம் ஏதும் இன்றி கல்லூரிக்கு சென்று படிக்க அவர்களுக்கு டாக்டர் எம்ஜிஆர் எஜூகேஷன் அண்ட் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டில் ˙ அட்மிஷன் பெற்றுக் கொடுத்துள்ளோம். என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நமது கலைஞர்களின் பிள்ளைகளுக்கு கட்டணமின்றி உயர்கல்வி வழங்கி பேருதவி புரிந்த டாக்டர் எம்ஜிஆர் யுனிவர்சிட்டியின் இயக்குனர் ACS. அருண்குமார் அவர்களுக்கும், வருடம் தவறாமல் நமது கலைஞர்களின் பிள்ளைகளின் கல்லூரி கனவு நிறைவேற ஒரு பாலமாக இருந்து, நமது சங்கத்திற்கு பெரிதும் உதவி செய்து வரும், நமது சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும், மாநில சங்கத்தின் முன்னாள் இணைச் செயலாளரும், இத்திட்டத்தின் மாநில சங்க பிரதிநிதியுமான, திரு.பாலச்சந்தர் அவர்களுக்கும் , நமது மாநில சங்கம் டாக்டர் எம்ஜிஆர் யுனிவர்சிட்டியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அனைத்து மாவட்டத்திற்கும், கல்லூரி நிர்வாகம் நமக்கு அளித்த சீட்டுகளை பகிர்ந்தளிக்க வேண்டிய கட்டாயத்தில் மாநில சங்கம் இருந்தாலும், நமது வேண்டுகோளை ஏற்று இம்முறை நாம் கேட்ட சீட்டுகளை எவ்வித மறுப்பும் இன்றி நமக்காக பெற்றுக் கொடுத்த மாநில தலைவர் சிவகுமார் அவர்களுக்கும், இவருடைய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் மாநில சங்க நிர்வாகிகளுக்கும் நமது சங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.






பொதுக்குழு தீர்மானப்படி நமக்கு நாமே உதவும் நோக்கத்துடன், சென்னை வீடியோ அண்ட் ஃபோட்டோகிராபர்ஸ் அண்ட் அலைடு டிரேடர்ஸ் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட் எனும் அறக்கட்டளையை பதிவு செய்து விட்டோம். வங்கி கணக்கு தொடங்குவதற்காக பான் கார்டுக்கு விண்ணப்பித்து விட்டோம். இது குறித்து மேலும் விபரங்கள் வருகின்ற பொது குழுவில் தெரிவிக்கப்படும்.

நமது சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று நமக்காக கேனான மிரர்லஸ் பயிற்சி வகுப்பு நடத்திக் கொடுத்த கேனான் நிறுவனத்திற்கும், அந்த நிறுவத்தைச் சார்ந்த ஜான் செல்வராஜ் குழுவினருக்கும், ஒளிப்பட பயிற்றுனர் மதுரை தனபால் அவர்களுக்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.















மாநில சங்கத்தின் செயற்குழு கூட்டம் இம்மாதம் கொடைக்கானலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது சங்கம் சார்பாக மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

## மத்திய சென்னை பகுதியில் உள்ள CVPA உறுப்பினர்களுக்காக கேனான் நிறுவனம் சார்பில் சென்னை எழும்பூர் அசோகா ஓட்டலில் நேரடியாக நடைபெற்ற பயிற்சி வகுப்பு




















## தென் சென்னை எஸ்-1 பகுதியில் உள்ள CVPA உறுப்பினர்களுக்காக கேனான் நிறுவனம் சார்பில் தி.நகர் குவாலிட்டி இன் சபரி ஹோட்டலில் நேரடியாக நடைபெற்ற பயிற்சி வகுப்பு.



















நமது சங்கத்தின் வட சென்னை பகுதியின் துணைத் தலைவரும், மாநில சங்கத்தின் மண்டலம் ஒன்றின் மண்டல செயலாளரும் ஆகிய கவுஸ்பாட்ஷா - மும்தாஜ்பேகம் தம்பதியினரின், மும்தாஜ் மன்ஜில் இல்ல புதுமனை புகுவிழா இம்மாதம் சென்னை எண்ணூரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் தலைவர் விக்ரம் ராஜா, தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேசன் அமைப்பின் தலைவர் சிவகுமார், பொருளாளர் சுரேஷ், அமைப்பாளர் சரவணன், இணைச் செயலாளர் அசோக், மற்றும் சக நிர்வாகிகள், சென்னை மாவட்ட சங்க தலைவர் செல்.செல்வம், நமது சங்கத்தின் சக நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், ஏராளமான சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



வடசென்னை, திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. முஹம்மது முஸ்தபா அவர்களின் மகள் **எம். சுமையா பாத்திமா**விற்கு நடைபெற்ற பூப் புனித நீராட்டு விழாவில் நமது சங்கத்தின் சார்பாக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



மத்திய சென்னை நுங்கம்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. திருமலைக்குமார் அவர்களின் மகள் **தி. மகாலட்சுமி** அவர்களுக்கு நடைபெற்ற பூப் புனித நீராட்டு விழா மற்றும் திருமலைகுமார் அவர்களின் தந்தை ஒளிப்படத்துறையில் 50 ஆண்டுகள் சேவை புரிந்தமைக்காக நமது சங்க செயலாளர் திரு. பிரேம்குமார் அவர்கள் நினைவு பரிசு வழங்கிய நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.



தென் சென்னை எஸ்1 தி நகர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினரும், முன்னாள் பகுதி செயலாளரும் ஆகிய சத்யகுமார் என்கிற சக்தி - எஸ். பொற்செல்வி இவர்களின் மகள் **பவித்ரா - தீபக்சாய்** இவர்களுக்கு நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் CVPA நியூஸ் ஆசிரியர் **ஸ்ரீதர் அவர்களின் பேத்தி**க்கு நடைபெற்ற பெயர் சூட்டு விழாவில் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.

நமது சங்கத்தின் தேனாம்பேட்டை பகுதி செயலாளர் T.M. ரவி அவர்களின் பேத்தியும், நமது சங்க உறுப்பினருமான அபி அவர்களின் மகளுமாகிய **லயஸ்ரீ** தனது முதலாவது பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் சார்பாக ஏராளமான சங்க உறுப்பினர்களும், இந்நாள், முன்நாள் சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்.




**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351